சுற்றுநிருபம் : 01/2013

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடமாகாணம்.
29.04.2013

வடமாகாணத்தில் உள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்,

## கல்வித்தகைமை மீளாய்வு
## கணக்காளர் பதவி (104/06-104/12)

வடமாகாணத்திலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காளர் பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக காணப்படுவதை ஆணைக்குழு கவனத்தில் எடுத்துக் கொண்டது. பொருத்தமான கல்வித்தகைமைகள் இருந்தும் வேண்டப்பட்ட சேவைத்தகைமை உயர்வாகக் காணப்பட்டமையால் ஏற்கனவே சேவையில் உள்ளவர்களை சங்கங்கள் உயர் பதவிக்கு உள்வாங்க முடியாதநிலை காணப்படுகின்றது. அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பல பணியாளர்கள் வேண்டப்பட்ட அனுபவத்தகைமைகள் உயர்வாகக் குறிப்பிடப்பட்டமையால் அத்தகைய பணியாளர்களை உயர்பதவிகளுக்கு உள்வாங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனை ஆராய்ந்த ஆணைக்குழு கணக்காளர் பதவிக்கான கீழ்க்குறிப்பிடப்படும் சம்பளகுறியீட்டு இலக்க பதவிகளில் வேண்டப்பட்ட தகைமையில் மாற்றங்களை மேற்கொள்ளத்தீர்மானித்துள்ளது.

**104/06 , 104/07 , 104/08** – **“இ”** பிரிவு மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது.

| பதவி/ சம்பள குறியீட்டு இல | பதவி | பிரிவு | தகைமைகள் |
|---|---|---|---|
| **104/06** | கணக்காளர் | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி / கூட்டுறவு திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவுத்துறையில் 06 வருட அனுபவம் இதில் 02 வருட கணக்காளர் அனுபவம். **அல்லது** க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 10வருட அனுபவம் இதில் 02 வருடம் கணக்காளர் அனுபவம். |
| **104/07** | கணக்காளர் | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் மேற்ப்பார்வை மட்டப்பதவியொன்றில் 05 ஆண்டுகால அனுபவம் **அல்லது** க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான |

| | | | |
|---|---|---|---|
| | | | சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம் |
| **104/08** | கணக்காளர் | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 ஆண்டுகால அனுபவம் **அல்லது** க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம். |

**104/09 , 104/10– "இ"** பிரிவு மாற்றப்பட்டுள்ளது

| பதவி/ சம்பள குறியீட்டு இல | பதவி | பிரிவு | தகைமைகள் |
|---|---|---|---|
| **104/09** | கணக்காளர் | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில 03 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம் |
| **104/10** | கணக்காளர் | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். |

**104/11 – ந்கான தகமைகள் சேர்க்கப்பட்டுள்ளன**

| பதவி/ சம்பள குறியீட்டு இல | பதவி | பிரிவு | தகைமைகள் |
|---|---|---|---|
| **104/011** | கணக்காளர் | அ | கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம் |
| | | | **அல்லது** |
| | | ஆ | ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையிலான சித்தி அல்லது ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு களங்களில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். |
| | | | **அல்லது** |
| | | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். |

**104/12 – “ஆ”,“இ” பிரிவு மாற்றப்பட்டுள்ளது**

| பதவி/ சம்பள குறியீட்டு இல | பதவி | பிரிவு | தகைமைகள் |
|---|---|---|---|
| **104/12** | கணக்காளர் | ஆ | ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையிலான சித்தி |
| | | | **அல்லது** |
| | | இ | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். |

இம்மாற்றங்களை 2013.01.01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

25.03.2013ந் திகதிய ஆணைக்குழு ஆணைப்படி,

Ms.K.PRABHA
Secretary
Co-operative Employees Commission
Northern Province

க.பிரபா
செயலாளர்.

பிரதி :

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.
2. செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, கொழும்பு.
3. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வடமாகாணம்.
4. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ வவுனியா/ முல்லைத்தீவு/ மன்னார்